'கற்பகம்' சிறப்பங்காடி' வேலூர்.

* வினா எண். 775—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள கற்பகம் சிறப்பங்காடியில் 1978—ஆம் ஆண்டில் தீபாவளி இனிப்புகள் எவ்வளவு ரூபாய் மதிப்பிற்குத் தயார் செய்யப் பட்டது?

(ஆ) எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:—

(அ) ரூ. 10,330 மதிப்புள்ள தீபாவளி இனிப்புகள் தயார் செய்யப்பட்டது.

(ஆ) ரூ. 11,340-க்கு விற்பனை செய்யப்பட்டன.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தயாரிக்கப்பட்ட இனிப்புகளில் மீதி என்ன செய்யப் பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கற்பகம் சிறப்பு அங்காடியில் தயாரிக்கப் பட்ட இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. ஆகவே, அந்தப் பிரச்னை எழவில்லை.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இனிப்புகள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். அதில் எந்தெந்த வகையான இனிப்புகள் என்று சொல்லவில்லை. உதாரணமாக, ஜிலேபி, மைசூர்பாக் என்று பல வகையான இனிப்புகள் இருக்கின்றன. எந்தெந்த வகையான இனிப்புகள் என்று அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் எந்தெந்த வகையான இனிப்புகளை மக்கள் விரும்புகிறார்களோ அதை அனுசரித்து, அதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டது.